# திருமலை ஆனந்த நிலைய கல்வெட்டுக்கள்



N. சந்திரன்

# திருமலை ஆனந்த நிலைய கல்வெட்டுக்கள்

N. சந்திரன்
சேர்மன் மற்றும் மேனேஜிங் டைரக்டர்
ஈஸ்ட்மேன் எக்ஸ் போர்ட்ஸ், குளோபல் கிளாத்திங்
பிரைவேட் லிமிடெட்
திருப்பூர்

# அணிந்துரை

மகேசனின் சேவை சிறிது செய்தாலும் அது வெகுவாக என்றும் அழியா பயன் அளிக்கும் என்பது சாஸ்திரங்களின் கூற்று. அதற்க் கொப்ப இந்த சிறிய பதிப்பை அச்சிடும் வாய்ப்பு எனக்கு கிடைத்தமைக்கு அவன் அருளே தலையாய காரணம் என்றால் அது மிகையல்ல. ஆதலினால் இதற்கு காரணமாக அமைந்த அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ள கடமை பட்டவனாகிறேன்.

புராணங்கள் போற்றும் தான்தோன்றி திருத்தலங்களில் தலையானதும் பக்தர்களின் மனதைக் கவர்ந்ததுமான திருப்பதி மலையின் மேல் வீற்றுள்ள வேங்கடேசப் பெருமாளின் புகழ் ஈடுஇணையற்றது. இம்மலையின் படிக்கட்டுகள் கூட ஸந்நிதானம் உடையவை என்று உயர்ந்து தவழ்ந்து வந்து தரிசனம் செய்த பக்தர்கள் பலர் உண்டு. பல புராணங்கள் இந்த மகிமையை புகழ்ந்தும் திருமாலின் கருணையை போற்றியும் வந்துள்ளன. இவை இந்த திருக்கோயில் பழமையையும் மகிமையையும் எடுத்து காட்டுவதாக அமைந்துள்ளன.

இந்த திருத்தலத்திலுள்ள கல்வெட்டுக்களை தமிழாக்கம் செய்து அதன் மூலம் இத்திருக்கோயிலுக்கு சேவை செய்த அடியார்களின் குறிப்புகளையும், செய்த பணிகளையும் மக்கள் எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் அச்சிட்டு வெளியிட்டால் எவ்வளவு போற்றிவந்தனர் என்பதும் சில வரலாற்று விஷயங்களும் தெளிவுபடும். ஆதலால் இந்த வெளியீடு, மிகவும் அவசியமானதாகும். இந்த இறை பணியில் நானும் சிறிது பங்கேற்பது எனது முன்னோர்கள் செய்த புண்ணியம் என்று கருதி, அனைத்து மக்களும் பயனுற இந்த வெளியீடு உறுதுணையாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை என்பதால் இப்பணியை மேற்கொண்டுள்ளேன். இக்கல்வெட்டுக்களை வாசித்து

செம்மையாக முன்னுரையும், கருத்துரையும் வழங்கிய மைசூர் தமிழ் கல்வெட்டாய்வாளர் முனைவர் சூ. சுவாமிநாதனுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இறைபணியை மேற்கொள்ள காரணமாக அமைந்த நண்பர்களுக்கும், அன்பர்களுக்கும் எல்லாவற்றிலும் மேலான ஏழுமலையானுக்கு எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த சேவையின் மூலம் கிட்டும் இறையருள் அனைத்து மக்களுக்கும் சென்று அதன் மூலம் இறைப்பணி செய்வோர்களின் எண்ணிக்கை மேலும் மேலும் வளரவேண்டும் என்று எல்லாம் வல்ல திருவேங்கடத்தானை வேண்டிக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
என்றும் இறைபணியில்

(என். சந்திரன்)

## முன்னுரை

வைணவத் தலங்களுள் தலை சிறந்ததும் மக்களால் பெரிதும் போற்றப்படுவதுமான திவ்ய தலம் திருப்பதி மலையிலுள்ள ஸ்ரீ வேங்கடசப் பெருமாள் கோயிலாகும். காலங் காலமாக ஏராளமான அடியார் கூட்டம் வந்து வழிபடும் திருத்தலமிது. இக்கோயிலைப் பற்றி புகழாத அடியாரே இல்லை எனலாம். சிறந்த வைணவரடியாரான குலசேகராழ்வார் பக்தி மேலீட்டால் தான் பொன்மயமான வேங்கடமலையில் பறவையாகவோ, ஒரு செடியாக, அருவியாகவோ இருக்க விழைகின்றேன் என்று பாடுகிறார்.

இத்திருத்தலம் தொன்மையானது. கடைச்சங்க காலத்துப் பெருங்காப்பியமான சிலப்பதிகாரத்தில் (கி.பி. 2ஆம் நூற்றாண்டு) இக்கோயிலைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. காடுகாண் காதையில் கோவலனும் அவன் மனைவி கண்ணகியும், உறையூரை விடுத்து மதுரைக்குச் செல்லும் வழியில் ஓர் மண்டபத்தில் தங்கினர். அப்போது மாங்காட்டு மறையன் என்ற அந்தணன் கோவலனிடம் தான் காவிரிக் கரையிலுள்ள திருவரங்கத்தில் பள்ளிகொண்டுள்ள திருமாலையும், சிறந்த அருவிகள் நிறைந்ததும், முகிலை முட்டும் வேங்கடமலையில் அழகான சிவந்த கையில் பால்வண்ணச் சங்கைக் கையில் தரித்திருப்பவரும் மார்பில் பொற்பூ அணிந்துள்ளவருமான இறைவனைக் காணச் செல்வதாக கூறுகிறான்.

மேலும் இதே காப்பியத்தில் தமிழ்நாட்டின் எல்லையைக் குறிப்பிடும்போது வடதிசை நெடியோன் வேங்கடம் என்கிறது. இது தமிழகத்தின் வட எல்லையில் அமைந்துள்ளதாலும், பண்டைய தமிழ்நாட்டில் இருந்தாலும், இங்கு பெரும்பான்மையான கல்வெட்டுக்கள் தமிழ்க் கல்வெட்டுக்களேயாகும். இக்கல்வெட்டுக்கள் சமய, சமுதாய, பொருளியியலை எடுத்து இயல்பும் வரலாற்றுக் கருவூலம்.

இக்கோயிலில் சுமார் 750 கல்வெட்டுக்கள் உள்ளன. பல்லவ கால கல்வெட்டுக்கள் முதல் விஜயநகர கால கல்வெட்டுக்கள் வரை உள்ளன. இவை பெரும்பாலும் தமிழிலேயே உள்ளன. வடமொழியின் உள்ள கல்வெட்டுக்கள் கிரந்த எழுத்தில் உள்ளன. இக்கோயிலின் தொன்மையையும், புகழையும் ஆராயுங்கால் இன்னும் பல கல்வெட்டுக்கள் இருந்திருக்க வேண்டும். அவை எல்லாம் பிற்காலத்தில் நடைபெற்ற திருப்பணியின்போது அழிக்கப்பட்டிருக்கலாம்.

இக்கல்வெட்டுக்களின் உதவியோடு நாம் திரு வேங்கடத்தையும் அதனைச் சுற்றிய பகுதிகளின் வரலாற்றையும் அறிந்து கொள்ளலாம். ஒரு சில கல்வெட்டுக்களின் சிறப்பியல்புகளை இங்கு ஆராய்வோம்.

இக்கோயிலின் முதற் பிரகாரத்தின் வடக்குச் சுவரில் வெட்டப்பட்ட பரகேசரி இராஜேந்திர சோழரின் கல்வெட்டு அதிகாரி கொற்றமங்கலமுடையான், திருச்சுகனூர் அவையிலிருந்து கோயிற் கருமமாராயுங்கால் குடவூர் நாட்டு வருவாயதிகா ி கடப்பங்குடையானையும் திருவேங்கடம் கோயிற்பணியாளரையும் விசாரித்துள்ளார். இதில் திருமுண்டியத்து சபையார் பொன் பெற்றுக் கொண்டு 24 திருநந்தா விளக்குகளின் 22 விளக்குகள் எரிக்கப்படவில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதற்குப் பரிகாரமாக இருபது பொன்னும் கோயிற்பண்டாரத்திலுள்ள மூன்று பொன்னும் சேர்த்து இவர்கள் (கன்மிகள்) எண்ணைப் பெற்றுத் திருமலைக்கு எடுத்துச் சென்று எரிக்க வேண்டும் என்று உத்தரவளித்தார். கோயில் பணியாளர்களும் அலுவலர்களும் அவ்வாறே கற்பூர விளக்கும், நந்தா விளக்கும் எரிக்க இசைந்துள்ளனர்.

சோழர் காலத்தில் இக்கோயிலுக்கு பல கொடைகள் நல்கப்பட்டன. முதல் பராந்தகசோழர் தனது

முப்பத்திரண்டாமாட்சியாண்டில் திருவேங்கடத்து நின்றருளின் பெருமானடிகளுக்குக் கொடையளித்துள்ளார்.

முதற் பிரகாரத்தின் வடக்குச் சுவரில் வெட்டப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு பார்த்திவேந்திரபர்மரின் கல்வெட்டும் (எண் 13) சத்திவிடங்கநாகிய ஸ்ரீ காடுபட்டிகள் மனைவியும் பல்லவர் பெற்கடையர் மகளுமான சாமவை ஸ்ரீ வேங்கடத்துப் பெருமானடிகளுக்கு பல ஆபரணங்களை ஈந்துள்ளார் என்று கூறுகிறது. அவை திருமுடி வயிரம், வைரமாலை, வைரக்கடகம், வெள்ளிபிரபை முதலியன.

திருவேங்கடமுடையானுக்கு பன்னெடுங்காலமாக ஏராளமான கொடைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனைச் சரிபார்த்து அவ்வப்போது தணிக்கை செய்வது வழக்கமாக இருந்தது. இதற்குத் திருவேங்கடத்து அவையாரே இக்கொடைகளுக்குப் பொறுப்பானவர். இதில் ஏதாவது தவறு நிகழ்ந்தால் அது கண்டுபிடிக்கப்பட்டு, தவறுகள் சரிசெய்யப்பட்டு நிவந்தங்கள் நிறைவேற்றப்பட்டன. சோழ மண்டலத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள திரு வேங்கடத்துக் கோயிலையும் சோழ அரசு கண்காணித்தது.

மேலே கூறப்பட்ட சாமைவையார் ஸ்ரீ வேங்கடனிடத்து பெரிதும் அன்பும் பக்தியும் பூண்டவர். இவர் வெள்ளியால் மணவாளப் பெருமானின் உருவத்தை எழுந்தருளி வித்துள்ளார். இதற்கு மார்கழி மாதம் ஏழு நாட்கள் ஏகாதசி வைபவத்தைக் கொண்டாடுவதற்குத் திருச்சுகனூர் அவையாருக்கும் கோயிலுக்கும் பொன் அளித்துள்ளார். வரிவிலக்கிற்கும் வகை செய்துள்ளார். (எண் 15). இதனைக் கைக்கொண்ட திருவேங்கடத்து அவையாரே எல்லா வைபவங்களையும் நடத்துவதாக சாமைவைக்கு உறுதி கூறியுள்ளார்.

இத்திருக்கோயிலில் பல தரப்பட்ட மக்கள் வந்து வழிபாடு செய்துள்ளார். ஒரு கல்வெட்டு (எண் 33 ஏ)

தஞ்சையையாண்ட யாதவமன்னன் நறுமணம் சூழ்ந்த வடவேங்கடநாதனுக்கு திருக்கைமலர் ஈந்துள்ளார் என்கிறது.

சோழ மன்னர்கள் சிறந்த பக்திமான்களாக இருந்தாலும், அவர்களின் கல்வெட்டுக்கள் குறைந்த அளவிலேயே உள்ளன. தங்களது ஆட்சியிலிருந்தது வெகு தொலைவிலுள்ள ஒரு வைணவக் கோயிலுக்கு செல்ல அவகாசமின்மையே இதற்குக் காரணம், ஆனால் அவர்கள் இக்கோயிலுக்கு நன்மையே புரிந்துள்ளார்கள்.

விஜயநகர் காலத்தில் இக்கோயில் மேன்மையடைந்து சிறப்புற்றது. இம்மாமன்னர்களும், மற்றவர்களும் அளித்த கொடைகள் பலப்பல. வைணவம் இவர்கள் காலத்தில்தான் புத்துயிர் பெற்றது என்றால் அது மிகையாகாது. இவர்கள் காலத்தில் இத்திருக்கோயிலில் ஏற்படுத்திய பூசனைகளும், விழாக்களும், அமுது படையல்களும் ஏராளம். கொடைகள் தாராளமாக நல்கப்பட்டன. சாளுவநரசிம்மர், கிருஷ்ணதேவராயர், அச்சுதராயர், சதாசிவராயர் போன்ற அரசர்களும், இவர்களது குடிமக்களும் இக்கோயிலைப் பெரிதும் புரந்தனர். ஒரு சில கல்வெட்டுக்களைக் காண்பது ஏற்புடையது.

ஒரு கல்வெட்டு சாளுவநரசிம்மரது (எண் **20**). இதன் காலம் கி.பி. **1469**. இது திருமலைக் கோயில் தானத்தார் கந்தாடை இராமானுஜ ஐய்யங்காருக்குச் செய்து கொடுத்த ஒர் ஒப்பந்தத்தைக் குறிப்பிடுகிறது. இவர் தினமும் அர்த்தசாமத்தில் இறைவன் அமுது செய்தருளும் போது இரண்டு திருப்போனகம் படைக்க தம்முடைய பொருளிட்டு கோயிலுக்கு உரிமையான திரு வேங்கடநல்லூரில் கால்வாய் வெட்டி அந்த நீரை கொண்டு பாணகம் என்ற ஊரில் பயிர்செய்து விளைந்த விளைச்சலைக் கோவிந்தப் பெருமாளுக்கு அமுது செய்தபிறகு இராமாநுஜ கூடத்தில் வரும் அடியார்களுக்கு விநியோகிக்க வகை செய்துள்ளார் என்கிறது.

மற்றொரு கல்வெட்டும் (எண் 30) இதே காலக் கட்டத்தைச் சார்ந்தது. திருமலை தானந்தார் அதிராஜாவிற்கு அளித்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிப்பிடுகின்றது. இவர் ஆயிரம் பணம் கொடையாக அளித்துள்ளார். இது கோயிலுக்கு உரிமையான கலிதீரமங்கலம் என்ற கிராமத்திலுள்ள ஏரியில் முதலீடு செய்யப்பட்டு இதிலிருந்து பெறப்படும் விளைச்சலைக் கொண்டு இறைவனுக்கு நித்தமும் திருப்போனகம் தன் பெயரில் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இறைவனுக்கு வழங்கப்பட்ட பின்னர் கொடையாளிக்கு நாலில் ஒரு பங்கு அளித்து மீதமுள்ளதை வழிபாட்டின்போது மற்றவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இதே போன்று சாளுவ குண்டுராஜாவின் மகனான திம்மரச உடையார்க்குத் திருமலை தானத்தார் செய்து கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைப் பற்றி ஒரு கல்வெட்டு (எண் 43) குறிப்பிடுகின்றது. இவர் நரசிங்கராஜ உடையாரின் நலத்திற்காக இறைவன் திருவேங்கட முடியானுக்கு தினமும் நான்கு முறை திருப்போனகம் வழங்குவதற்கு அந்நீரை கோயிலுக்கு உரிமையான அவிலாலியில் உள்ள நிலத்திற்குப் பாயவிட்டு அதனால் வளரும் பயிரை கோயிற்பண்டாரத்தில் முதலாகச் செலுத்தி அதனை இறைவனுக்கு அளிக்க வேண்டும் என்றும், அவ்வாறு படைத்த உணவைக் கொடையாளியின் அறமாகக் கோயில் திருநந்தவனம் பயிர்செய்யும் அடியாரும், தானத்தாரும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறது.

இக்கல்வெட்டுக்கள் திருமலைக்கோயிலின் பொருளாதார நிலையை தெற்றென உணர்த்துகின்றன. திருமலை திருப்பதியில் இக்கோயிலுக்கு உரிமையான நிலங்கள் இருந்தான. மேலும் அருகாமையில் அவிலாலி, திருச்சானூர், கொற்றமங்கலம், கூறை (எண் 18) போன்ற இடங்களிலும் கோயிலுக்கு உரிமையான நிலங்கள் இருந்தன. விவேகமும்,

தீர்க்கதரிசனமுள்ள கோயில் தானத்தார் இந்நிலங்களை அப்படியே தரிசாகப் போட்டுவைக்க வில்லை. அதனைத் திருத்தி, விளைநிலமாக மாற்றி பொருளாதார மேம்பாட்டுக்கு வழிவகுத்தனர்.

திருப்பதியில் நீர்பாசன வசதி பெருக இக்கொடைகள் மூலாதாரமாக இருந்தன. கோயிலில் நடத்தப்படும் விழாக்களுக்கும், பூசைகளுக்கும், படையல்களுக்கும் நிலையான வருவாயே காரணமாகும். கொடையாளிகள் நிலத்திலோ, நீரிலோ, முதலீடு செய்யாமலிருந்தால் கோயிலில் இவ்வளவு உணவு படையல்களோ, திருவிழாக்களோ நடந்திருக்க வாய்ப்பில்லை. கி.பி. **16** ஆம் நூற்றாண்டிலிருந்து கொடைகள் பெருகக் கோயிலின் செம்மையான நிருவாக அமைப்பும், பெருகிவரும் இக்கொடைகளைப் பெற்றுக்கொண்டு இதனை இலாபகர வழியில் முதலீடு செய்து கோயிலுக்கு நிலையான வருமானம் வர வழி செய்தது. பல தரிசுநிலங்கள் திருத்தப்பட்டன. ஆறுகள் வெட்டப்பட்டன. கால்வாய்கள் தோண்டப்பட்டன. கிணறுகள் குழிக்கப்பட்டன. குளங்கள் சுத்தம் செய்யப்பட்டு ஆழப்படுத்தப்பட்டன. இதனால் நீர்பாசன வசதி சீரமைக்கப்பட்டதோடு விளைச்சலும் பெருகின. இதனையறிந்து கொண்ட கொடையாளிகள் தங்களது கொடைகளை இதுபோன்ற ஆக்கப் பூர்வமான பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டனர். தங்கள் பெயர்களில் கோயில்களில் நித்தம் அமுதுபடி, பூசனை (எண் **3**) பிறந்த நாள்கள் வைபம் (எண் **3**ஏ), திருப்போனகப் படையல் (எண் **4**) வைகாசி, ஆனித்திங்கள் பூசனை மற்றும் படையல் (எண் **8** எண் **25**), மகரசங்கிராந்தி வழிபாடு (எண் **28**), மணவாளப் பெருமாளுக்கு நித்த நிமந்தங்கள் (எண் **13**), சிறப்புச் சந்தி முதலிய பல வழிபாட்டு பூசனைகளை ஏற்படுத்தினர். பல பதிய தெய்வங்களும் கடவுள்களும் உருவாக்கப்பட்டன. இதனால் பலருக்கும் வேலை வாய்ப்பு

கிடைக்க ஏதுவாயிற்று. மடங்களும் யாத்திர்கள் விடுதிகளும் கட்டப்பட்டன.

இறைவனுக்குப் படைக்கப்பட்ட உணவு பக்தாதிகளுக்கும், யாத்ரீகர்களுக்கும் வழங்கப்பட்டன. கொடையாளிக்கு அளிக்கப்பட்ட மிகுதியான உணவு விற்கப்பட்டதாக ஓர் ஆய்வாளர் கருதுகிறார். இவ்வாறு ஏற்படுத்திய நிலங்களும், கொடைகளும் இக்கோயிலை ஒரு பெரும் பொருளாதார மையமாக உருவெடுக்கச் செய்தது. திருமலைக்கோயில் வளமிகுந்த கோயிலாக மாற்ற விசயநகர காலத்தில் ஏற்படுத்திய இவ்வறக் கட்டளைகளே என்றால் அது மிகையாகாது.

மற்றொரு கல்வெட்டும் பொருளாதார வரலாற்றுக்கும் பயன்படுவது. (எண் 28ஏ) திருமலை தானத்தார் சோமநாத தீக்ஷிதர் என்ற அந்தணருக்கு செய்து கொடுத்த ஒரு உடன்பாட்டைக் கூறுகின்றது. (எண் 25ஏ). இவர் கோயிலுக்கு உரிமையானதும் அந்தணர்களின் பிழைப்பிற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தைக் கோயிலிடமிருந்து வாங்கி கோயிலுக்கே கொடையாக அளித்துள்ளார். இந்நிலத்தின் மீது வசூலிக்கப்படும் வரிகளான கார்கோடை, கடமை, இவையிற்றுக்கு ஈடாகத் தினமும் இறைவனின் உணவு படையலுக்காக ஒரு ஏற்பாடு செய்துள்ளார். அதனைத் தனக்கும் மற்றவர்களுக்கும் காலைச் சந்தி வழிபாட்டின்போது பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளார்.

இக்கல்வெட்டானது மிகவும் முக்கியமானது. கோயில் நிலத்தை அந்தணருக்கு விற்றாலும் நிலம் கோயிலிடத்தில்தான் உள்ளது. நிலத்திற்கான வரிகள் இவர் கோயிலுக்கு அளிப்பதற்கு ஈடாக ஒரு சந்தி வழிபாடு ஏற்பாடு செய்துள்ளார். கோயிலுக்கு நிலம், நிலத்திற்கான தொகை, மேலும் சந்திவழிபாடு முதலியன கிட்டியுள்ளன.

மேலும் உணவானது கொடையாளிக்கு அளித்தது போக மீதமில்ளது மற்ற கோயில் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டுக்களை ஆராயுங்கால் கி.பி. **1456** லிருந்து கி.பி. **1570** வரை இக்கோயிலுக்கு ஏராளமான நிலங்களும் பொருளும் அளிக்கப்பட்டு கொடையாளிகளின் பேரில் ஏராளமான சந்தி வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இவை கோயிலைப் பொருளாதார ரீதியில் வலுவடையச் செய்தன.

பெருமளவில் உணவு தயாரிக்கப்பட்டு பக்கதர்களுக்கும், கோயில் ஊழியர்களுக்கும் அளிக்கப்பட்டன. பக்தாதிகள் நலனுக்காக கட்டப்பட்டுள்ள விடுதியான இராமாநுஜ கூடத்தில் இது எல்லோருக்கும் அளிக்கப்பட்டன. ஒரு மக்கள்நல்அரசைத் திருமலை திருப்பதியில் காண முடிகிறது.

கிருட்டிணதேவராயரின் கல்வெட்டுக்களும் பல இக்கோயிலிலே உள்ளன. இவர் ஏழு முறை திருவேங்கடத்திற்கு வந்து இறைவனை வழிபட்டுள்ளார். அவ்வமயம் அவர் ஏராளமான கொடைகள் நல்கியுள்ளார். இவர் ஒவ்வொரு முறையும் போரில் வென்று வெற்றிவாகை சூடித் திரும்புங்கால் வேங்கடவனை வழிபடுவது இவர் வழக்கம் என கருதவேண்டியுள்ளது.

முதற் பிரகாரத்தின் வடக்குச் சுவரிலுள்ள ஒரு கல்வெட்டு தெலுங்கு மொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. (எண் **1**) மன்னரின் (கி.பி. **1512**) அரசியார் சின்னாஜி அம்மன் திருமலைக்குச் சென்று ஒரு பொற்பாத்திரத்தை ஈந்துள்ளார். இதனைக் கன்னட மொழியிலும் வெளியிட்டுள்ளார். இதே சமயத்தில் மன்னரும் திருவேங்கடநாதனுக்கு மணிகள் பதித்த கிரீடமும் ஆபரணங்களும் அளித்துள்ளார். (எண் **5**) அடுத்த வருடம் (கி.பி. **1513**) மன்னர் இறைவனுக்கு விலையுயர்ந்த மாணிக்க கற்களும், முத்துக்கள் பதித்த ஆபரணங்களும் ஈந்துள்ளார் (எண் **24**ஏ).

கிருட்டினதேவராயரின் கன்னடக் கல்வெட்டு ஒன்று (எண் 38) இவரது வாயிற்காவலாளி நரசய்யனும் அவனது குடும்பத்தினரும் எப்போதும் இறைவனை வழிபடுபவர்கள் என்கிறது.

மன்னரின் இக்கொடைகள் இவரது இறையன்பைத் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு போரிலும் வெற்றிபெற்று திரும்புங்காலையில் இவர் திருவேங்கடத்துக்கு வந்து கொடையளிப்பதை நோக்குங்கால் இவை போரில் கிடைத்த பொருள்களாக இருக்கலாமோ என்ற எண்ணம் எழுகின்றது. இவர் காலத்தில் வேங்கடம் ஒரு அற்புதத் தலமாய் இருந்தது. ஏராளமான அடியார்கள் வந்து வணங்கும் திருத்தலமாக விளங்கியது. பலதரப்பட்ட மக்கள் அளித்த கொடையுடன் தான் ஈந்த கொடைகளும் மன்னருக்கு பெருமை சேர்த்தது. இவரது வருகை, வழிபாடு, கொடை, போன்றவை இவரது இறையாண்மைக்கு, ஏற்றமளித்ததோடு மட்டுமின்றி மக்களையும் ஈர்த்தன. ஹம்பியிலிருந்து நெடுந்தொலைவிலுள்ள திருமலைப் பிரதேசங்களில் தனது ஆட்சியை வலுவுறச் செய்யவும், மக்களிடத்தில் தனது இறையண்மையை பரப்பவும் மன்னர் ஆண்ட உத்தி என்று கொள்வதில் தவறில்லை.

திருப்பதி திருமலைக் கல்வெட்டுக்களில் அடியார்கள் வந்து தங்குவதற்கு இராமாநுஜ கூடம் என்ற பயணி விடுதி இருந்ததைக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. விழாக்காலத்திலும் மற்ற நாட்களிலும் வரும் அடியார்களுக்கு உணவும், உறைவிடமும் வழங்கப்பட்டன. இதனைக் கோயில் நிர்வாகமே நடத்தியிருக்கலாம். விஜயநகர் அரசர்கள் காலத்தில் இதனின் மேலாளர் கந்தாடை இராமாநுஜ அய்யங்கார் என்பார் என்று ஒரு கல்வெட்டு தெரிவிக்கின்றது. (எண் 29ஏ) கோயிலில் இறைவனுக்கு உணவு படைத்த பின்பு அதனை இராமாநுஜ கூடத்திலுள்ள

வைணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதாகப் பல கல்வெட்டுக்கள் இயம்புகின்றன.

ஒரு கல்வெட்டு சுவையானது. (எண் 27) விஜய நகரமன்னர் நரசிம்மர் காலத்தில் (கி.பி. 1457) நரசிம்ம பெருமாள் கோயிலின் நடன மங்கையுமான வேங்கடவல்லி தன்னுடைய பெயரில் இறைவனுக்கு உணவு படையலுக்காக ஆயிரம் பணம் அளித்துள்ளார். பலதரப்பட்ட மக்களும் மனமுவந்து கொடைகளை அளித்தது குறித்து கல்வெட்டுக்கள் இயம்புகின்றன.

இறைவனுக்கு படைக்கப்பட்ட பணியாரங்கள் பல கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளன. திருக்கண்ணாமடை, திருப்போனகம், சற்கரையமுது, கறியமுது, பெரிய அப்பம், சீடை, அக்காளிபிரசாதம் போன்ற உணவு வகைகளை பெரிய அளவில் தயாரிக்க பெரிய மடைப்பள்ளி இருந்திருக்க வேண்டும். இவ்வுணவுகளைத் தயாரிக்க பணியாளர்கள் இருந்திருக்கவேண்டும். பெரிய மடைப்பள்ளியும், ஏராளமான மடையர்களும் இருந்திருக்க வேண்டும்.

இக்கல்வெட்டுக்கள் மக்கள் அளித்த கொடைகளை இயம்பும் வெறும் ஆவணமில்லை. மக்களின் பக்தி உணர்வு மேலீட வையகம் வாழ அன்புடன் இவற்றை வேங்கடமுடையானுக்கு அளித்துள்ளனர்.

தீராத வினையெல்லாம் தீர்த்து வைப்பான் கோவிந்தன் என்ற மக்களின் நம்பிக்கையையும் திருவேங்கடமாமலை என்றுமே தொழ நம்வினை ஓயுமே என்ற ஞானியான நம்மாழ்வாரின் திட நம்பிக்கையையும் தான் இக்கல்வெட்டுக்களின் பிரதிபிலிக்கின்றன. வேங்கடவனின் ஒவ்வொரு அசைவுக்கும் ஒர் பூசனை ஏற்பாடு செய்துள்ள பக்தாதிகளின் மாண்புதான் என்னே ! மலைக்கினிய பெருமாநும் (எண் 39) அவரது நாச்சிமாரும்

திருப்பூமண்டத்தில் வந்துத் தங்குங்கால் அவர்களின் நீராடலுக்கும், உணவுபடையலுக்கு ஸ்ரீ வைணவரான திருக்கலிகன்றிதாஸரின் கொடைபக்தி மேலீட்டால் விளைந்ததல்லவா ? இதே பக்திதான் மல்லண்டையர் என்பார் தினமும் (எண் 40) தன்பெயரில் இரு வேளை திருவேங்கடமுடையானுக்கு உணவு அளிக்க கோயிலுக்கு உரிமையான பாடி என்ற கிராமத்திலுள்ள நிலத்திற்கு நீர்பாய ஆறு வெட்டுவித்துள்ளார். இறைவனுக்குப் படைத்த உணவு வகைகளை மல்லண்டையருக்கும் மற்ற அடியார்களுக்கும் வழிபாட்டு வேளையில் வழங்க ஏற்பாடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவைப் போன்றே வேங்கடவனின் அடியார்கள் இச்சுவை தவிர யான்போய்

இந்திரலோகம் ஆளும்

அச்சுவை பெரினும் வேண்டேன்.

என்ற தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் மனநிலையே இக்கொடையாளிகளும் பெற்றிருந்தனர். இக்கல்வெட்டுக்களை பக்தி மனநிலையுடன் ஆய்வது இன்றியமையாதது.

# 1

# கிருஷ்ணதேவராயரின் திருமலைக் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் வட சுவர்

குலம் : விஜய நகரம் மன்னர் : கிருஷ்ணதேவராயர்

மொழி : தெலுங்கு

காலம் : சக வருடம் 1434 எழுத்து : தெலுங்கு

கி.பி. 1513

குறிப்புரை : கிருஷ்ண தேவராயரின் அரசியார் சின்னாஜி அம்மன் திருமலைக்குச் சென்று, கடவுள் திருவேங்கடநாதனுக்கு சமர்பிக்கப்படும் பொருள்களை வைத்துக்கொள்ள ஓர் பொற்பாத்திரம் நல்கியுள்ளார்.

ஆதாரம் : திருமலைக்கல்வெட்டுக்கள். தொகுதி. 3. எண். 41.

## 2

# கிருஷ்ணதேவராயரின் திருமலைக் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் வட சுவர்

குலம் : விஜய நகரம்

மன்னர் : கிருஷ்ணதேவராயர்

மொழி : கன்னடம்

காலம் : சக வருடம் 1434, கி.பி.1513

எழுத்து : கன்னடம்

குறிப்புரை : கிருஷ்ண தேவராயரின் அரசியாரான சின்னாஜி அம்மன் திருவேங்கட நாதனுக்கு ஒரு பாத்திரம் கொடையாக அளித்துள்ளார்.

ஆதாரம் : திருமலைக்கல்வெட்டுக்கள்.

தொகுதி. 3. எண். 42

# 2-A

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதல் ஜகதி. வடக்கு

குலம் : விஜய நகரம்

காலம் : கி.பி. 15ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

குறிப்புரை : இது இறைவனுக்கு உணவு படையலுக்காக அப்பம் அமுது செலுத்தப்பட வேண்டியது என்றும், பின்னர் அதனை கோயிற் கருவூலத்தில் சேர்க்க வேண்டும் என்கிறது.

சான்று : ஆண்டறிக்கை – 2009.

# 3

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

**இடம்** : முதற் பிராகாரத்தின் வடக்குச் சுவர்.

**காலம்** : சக வருடம் 1368; கி.பி. 1446.

**அரசன்** : சாளுவ எர்ர கம்பய தேவமகாராஜா.

**மொழி** : தமிழ்; எழுத்து : தமிழ்

**குறிப்புரை** : பெரிய மல்லய தேவ மகாராஜாவிற்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் அளித்த ஓர் ஒப்புதலைக் குறிக்கின்றது. இவர் கோயிற் பண்டாரத்தில் ஆயிரம் பணம் செலுத்தியுள்ளார். இதிலிருந்து பெறும் வட்டியிலிருந்து இறைவனுக்கு நித்தமும் தன் பெயரில் (உபயமாக) திருப்போனகம் அமுது செய்ய நெய், பயறு, தயிர், கறிகாய், உப்பு, மிளகு முதலியவைகளைப் பெற்று பண்டாரத்தில் செலுத்தப்பட வேண்டியது என்றும், படைத்த உணவு வகைகளை சந்தி அடைப்பிலே (பூசனைக்குப் பிறகு) செலவழிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**ஆதாரம்** : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி 1 எண். 210. பக்கம் 211.

# 3-A

## அச்சுதராயரின் திருமலைக் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்து பத்ம பட்டை

குலம் : விஜய நகரம் அரசன் : அச்சுதராயர்

காலம் : சக வருடம் 1454 மொழி : தமிழ்

கி.பி. 1532 எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலைக்கோயில் தானத்தார் நெடுங்குன்றத்தில் வசிக்கும் துவாராபதி வேளாரின் மகனான பிழை பொறுத்தாருக்கு செய்து குடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிப்பிடுகின்றது. இவர் ஒவ்வொரு திங்களிலும் தான் பிறந்த உத்திரநட்சத்திரத்தினன்று மலைக்கினிய பெருமாளுக்கு பல்வகையான உணவு வகைகளைப் படைக்க 5000 நற்பணம் நல்கியுள்ளார். இப்பணத்திலிருந்து வளரும் வட்டியிலிருந்து பல்வகையான உணவு வகைகளை படைக்க ஒப்புக்கொண்டுள்ளனர். இதற்குத் தேவையான பொருட்களையும் பின்னர் இறைவனுக்குப் படைக்கப்பட்ட உணவு வகைகளை பகிர்ந்தளிப்பது பற்றியும் விவரிக்கிறது.

ஆதாரம் : திருமலைத் திருப்பதி கல்வெட்டுக்கள்.

தொகுதி. 4. எண். 15.

# 4

## சாளுவ நரசிம்மரின் திருமலைக் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் வட சுவர்

குலம் : விஜய நகரம் அரசன் : நரசிம்மன்

காலம் : சக வருடம் 1389 மொழி : தமிழ்

கி.பி. 1467 எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலை தானத்தார் திம்மய்ய தேவமகாராஜாவுக்கு செய்து கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிக்கிறது. இவர் தனது பொருளை முதலீட்டு செய்து நிலத்தில் ஓர் ஏரி வெட்டியுள்ளார். இதிலிருந்து விளையும் தானியங்களைக் கொண்டு தம்முடைய பெயரில் இரு திருப்போனகம் அமுது செய்தருளுவதற்கு வகை செய்துள்ளார். திருப்போனகம் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்களையும் இக்கல்வெட்டு குறிக்கின்றது.

ஆதாரம் : திருமலைக் கல்வெட்டுக்கள்

தொகுதி 2. எண். 27.

# 5

# கிருஷ்ணதேவராயரின் திருமலைக் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் வட சுவர்

குலம் : விஜய நகரம் அரசன் : கிருஷ்ணதேவராயர்

காலம் : சக வருடம் 1434; மொழி : தெலுங்கு

கி.பி. 1512 எழுத்து : தெலுங்கு.

குறிப்புரை : மன்னர் திருவேங்கடநாதனின் திருக்கோயிலுக்குச் சென்று மணிகள் பதித்த கிரீடமும், மற்ற ஆபரணங்களும், இறைவனுக்களித்தார். கற்களின் எடை குறிக்கப்பட்டுள்ளன.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள்

தொகுதி 3. எண். 32.

# 6

# கிருஷ்ணதேவராயரின் திருமலைக் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் வட சுவர்

குலம் : விஜய நகரம் அரசன் : கிருஷ்ணதேவராயர்

காலம் : சக வருடம் 1434; மொழி : கன்னடம்

கி.பி. 1512 எழுத்து : கன்னடம்

குறிப்புரை : கிருஷ்ணதேவராயரின் அரசி சின்னாஜி அம்மன் திருமலைக்கு வருகைதந்து திருவேங்கடநாதனுக்கு அளித்துள்ள பொருள்களை வைத்துக்கொள்ள ஒரு பொற்பாத்திரம் அளித்துள்ளார்.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள் தொகுதி 3. எண். 45.

# 7

# கிருஷ்ணதேவராயரின் திருமலைக் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் வட சுவர்

குலம் : விஜய நகரம் அரசன்: கிருஷ்ணதேவராயர்

காலம் : சக வருடம் 1434; மொழி : கன்னடம்

கி.பி. 1512 எழுத்து: கன்னடம்

குறிப்புரை : கிருஷ்ணதேவராயரின் அரசி திருமலதேவி திருமலைக்குச் சென்று வழிபட்டு இறைவனுக்கு படைக்கப்பட்ட பொருள்களை வைத்துக்கொள்ள ஒரு பொற்பாத்திரத்தை தந்துள்ளார். இதன் எடை குறிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள் தொகுதி 3. எண். 52.

# 8

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் வட சுவர்

குலம் : விஜய நகரம்

காலம் : சக வருடம் 1368; மொழி : தமிழ்

கி.பி. 1446 எழுத்து : தமிழ்

குறிப்புரை :கோயிற் தோட்டமான பங்கயச் செல்வியை நிர்வகிக்கும் எம்பெருமான் ஜீயருக்கு திருமலைக்கோயிற் தானத்தார் செய்து கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிக்கின்றது. இவர் கோயிற் கருவூலத்தில் ஆயிரம் பணம் செலுத்தியுள்ளார். இதிலிருந்து வளரும் வட்டியிலிருந்து வைகாசி மற்றும் ஆனித் திங்கள் ஏழு நாட்களில் கோவிந்தராஜப் பெருமாளுக்கு உணவு படையல், பூசனை, முதலியவை செய்யவேண்டும். இறைவனுக்கு படைத்த உணவினை ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவர் களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது இக்கல்வெட்டு.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள்

மடலம் 1. எண். 221.

## 9

# வீரநரசிங்க தேவயாதவராயரின் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதல் பிராகாரத்தின் வடக்குச் சுவர்.

காலம் : ஆட்சியாண்டு 40; கி.பி. 14ம் நூற்றாண்டு.

அரசன் : வீரநரசிங்க தேவர்.

மொழி : தமிழ் எழுத்து : தமிழ்

குறிப்புரை : அரசன் தனது ஆணையை தானத்தாருக்கு அறிவிப்பது. முன்பு வெட்டப்பட்டுள்ள பழைய கல்வெட்டுப்படிகளை முதல் பிராகாரத்தின் வெளிச்சுவரின் வடபகுதியில் பொறிக்கப்பட வேண்டும் என்ற ஆணையை அனுப்பியுள்ளான். இது ஏனெனில் திருப்புல்லாணி தாசர் என்ற தேசாந்திரி, கோயிலாழ்வாரின் கோயிலை புதுக்குவிக்க இருப்பதால் இதனை தானத்தார் எழுத வேண்டும் என்பதால் இவ்வாணை.

இதன்படி சோழ மன்னரின் முதலாம் இராசராசரின் 16ஆம் ஆண்டு கல்வெட்டொன்று (கி.பி. 1001) சேரமன்னரின் மகளும், பொன்மாளிகையில் இறந்த அரசரின் அரசியருமான தேவி அம்மனார் திருவேங்கட இறைவனுக்கு அளித்த 52 கழஞ்சு எடையுள்ள ஒரு பட்டத்தை நல்கியுள்ளார் என்ற செய்தியைத் தருகின்றது.

ஆதாரம் : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி 1. எண். 88. பக்கம் 119–120.

# 10

# அச்சுததேவராயர் காலத்து திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்து வட சுவர்

குலம் : விஜய நகரம் அரசன் : அச்சுததேவராயர்

காலம் : சக வருடம் 1458; மொழி : தமிழ்

கி.பி. 1536 எழுத்து : தமிழ்

குறிப்புரை :பெருங்கொண்டை வீரப்பன் திருமலைக்கோயில் தானத்தாரிடம் 200 பணம் அளித்துள்ளார். மேலும் பாசிகலப்பாடு என்ற கிராமத்திலிருந்து வசூலிக்கப்படும் இரேகை வரியான 120 பணமும் அளித்துள்ளார். இது, மன்னர் அச்சுதராயரின் நன்மை பொருட்டு தினமும் திருவேங்கடமுடையானுக்கு எட்டு திருப்போனகம் படைக்க வேண்டும் என்பதற்காக அளிக்கப்பட்டது. இதற்குத் தேவையான பொருள்களும், பின்னர் இறைவனுக்குப் படைத்த இவ்வுணவினை பலருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய முறையையும் விவரிக்கிறது.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள்

தொகுதி 4. எண். 77.

# 11

# அச்சுதராயரின் திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற் பிராகாரத்தின் வடக்குச் சுவர்.

காலம் : 15ம் நூற்றாண்டு.

அரசன் : அச்சுதராயர் குலம் : விஜய நகரம்.

மொழி : தமிழ் எழுத்து : தமிழ்

குறிப்புரை : அச்சுதமஹாராயரின் அலுவலரும் லெபாகைஷியைச் சார்ந்த நந்திலக்கிச்செட்டி என்பவரின் மகனுமான பெருங்கொண்டை வீரப்பண்ணன் என்பார் செம்பொன்னால் ஆன பாத்திரம் ஒன்றை அளித்துள்ளார். இதன் மதிப்பு ஐய்யாயிரம் பணம்.

ஆதாரம் : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி எண் .4 எண். 78.

# 12

## பரகேசரி இராஜேந்திர சோழரின் திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற் பிராகாரத்தின் வடக்குச் சுவர்.

காலம் : சக வருஷம் 7; கி.பி. 1019.

அரசன் : பரகேசரி இராஜேந்திர சோழர்.

மொழி : தமிழ் எழுத்து : தமிழ்

குறிப்புரை : அதிகாரி கொற்றமங்கலமுடையான் திருச்சுகனூரிலுள்ள அவையிலிருந்து கோயிற் கருமமாராயுங்கால் குடவூர் நாட்டு வரி அதிகாரி கடப்பங்குடையானையும் திருவேங்கடதேவர் கோயிற் பணியாளரையும் விசாரித்துள்ளார். இதில் திருமுண்டியத்து சபையார் பொன் பெற்றுக்கொண்டு 24 திருநந்தாவிளக்குகளில் 22 விளக்குகள் எரிக்கப்படவில்லை. இதன் முதலான 20 பொன்னும் கோயிற் பண்டாரத்திலுள்ள 3 பொன்னும் சேர்த்து, இவர்கள் (கன்மிகள்) எண்ணை பெற்றுத் திருமலைக்கு எடுத்துச் சென்று எரிப்பிக்க வேண்டும் என்று உத்தரவளித்தார். கோயில் பணியாளர்களும், அலுவலர்களும் அவ்வாறே கற்பூர விளக்கும், நந்தா விளக்கும் எரிக்க இசைந்துள்ளனர்.

ஆதாரம் : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி எண் . 1 எண். 19. பக். 29–30.

# 12A

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : தெற்குச்சுவர், முதற்பிராகாரம்

குலம் : விஜய நகரம் அரசன் : அச்சுதராயர்

காலம் : சக வருடம் 1453; மொழி : தமிழ்

கி.பி. 1531 எழுத்து : தமிழ்

குறிப்புரை : இக்கல்வெட்டானது திருமலை தானத்தார் பண்டார அதிகாரியான தமப்பன் என்பாருக்கு செய்து கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிக்கிறது. இவர் தனது அறமாக நாள்தோறும் இரண்டு திருப்போனகம் திருவேங்கடமுடையானுக்கு படைக்க கோயில் கருவூலத்தில் 3000 பணம் செலுத்தியுள்ளார். இதில் முன்பு மன்னர் கிருஷ்ணதேவராயர் சிருபாடியில் தூப்பில் திக்ஷிதருக்கு தானமாக அளித்த மாதவந் கால்வாயி (என்ற பெயருடைய ) நிலத்தை தேசாந்திரிகளிடமிருந்து வாங்கி, விடுத்தார். இதில் விளைந்த முதல் கொண்டு அதில் தேவையான பொருள்கள் பெற்று அதனை பண்டாரத்தில் செலுத்தி உணவு படைத்தல் வேண்டும். பின்னர் இவ்வாறு படைத்த உணவில் நாலில் ஒரு பங்குதான் பெற்று மீதியை வழிபாட்டின் போது தானத்தார் பெற்றுக்கொள்ள வேண்டியது என்று கூறுகிறது.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள்

தொகுதி 4. எண். 13.

## 13

# பார்த்தி வேந்திரபர்மரின் திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

**இடம்** : முதற் பிராகாரத்தின் வடக்குச் சுவர்.

**காலம்** : 14ம் ஆட்சியாண்டு கி.பி. 969.

**மொழி** : தமிழ் எழுத்து : தமிழ்

**குறிப்புரை** : சத்திவிடங்கநாகிய ஸ்ரீகாடுபட்டிகள் மனைவியும் பல்லவப் பெற்கடையரும் மகளுமான சாமவை ஸ்ரீவேங்கடத்துப் பெருமானடிகளுக்கு பல ஆபரணங்களை ஈந்துள்ளார். அவை திருமுடி வைரம், திருக்காதில் பொன்னின் மகரம், திருக்கழுத்துக்கு வைர மாலை, வயிற்று ஆபரணம், கைக்கடகம், வெள்ளி பிரபை முதலிய ஆபரணங்களாகும். பின்னர் மணவாளப் பெருமாளுக்கு நித்த நிமந்தங்கள் உணவு படையல், திருநந்தாவிளக்கெரிதல் திருமஞ்சனமாட்டல் திருவிழா முதலிய வைபவங்களுக்காக விலை கொடுத்து ஒரு 3000 குழி நிலம் வாங்கி, அதற்கு இறையிழிச்சி செய்தும் கொடுத்துள்ளார். திருவேங்கடத்து அவையாரே இவ்வேற்பாட்டை கண்காணிக்கவும் வேண்டும் என்று கல்வெட்டு கூறுகிறது.

**ஆதாரம்** : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி எண். 1 கல்வெட்டு எண். 8

பக்கம் 13–14.

**14**

# திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

**இடம்** : முதற் பிராகாரத்தின் வடக்குச் சுவர்.

**காலம்** : சக வருடம்: 1372; கி.பி. 1450

**அரசன்** : மலகங்கய தேவ மகாராஜா

**மொழி** : தமிழ் எழுத்து : தமிழ்

**குறிப்புரை** : திருமலை தானத்தார் இளவரசர் சிறுமல்லைய தேவமகாராசாவிற்கு செய்துக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிக்கின்றது. இவர் ஆயிரம் நற்பணம் கோயிற் பண்டாரத்தில் செலுத்தியுள்ளார். இதிலிருந்து வளரும் வட்டியிலிருந்து தினமும் தன் பெயரில் திருவேங்கட முடையானுக்கு திருப்போனகம் அமுது செய்ய நெய், பயறு, தயிர், கறி காய், உப்பு, மிளகு முதலிய உணவுப் பொருட்களைப் பெற்று பண்டாரத்தில் செலுத்தப்பட வேண்டியது என்றும் பின்னர் படைத்த உணவு வகைகளை எல்லா சந்தி வழிபாட்டின் பின்னர் செலவழிக்கப்பட வேண்டியது என்று கூறுகிறது.

**ஆதாரம்** : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி 1 எண். 218. பக். 225–226.

# 15

# பார்த்திவேந்திரவர்மரின் திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற் பிராகாரத்தின் வடக்குச் சுவர்.

காலம் : ஆட்சியாண்டு 14; கி.பி. 969.

அரசன் : பார்த்திவேந்திரவர்மன்.

மொழி : தமிழ் எழுத்து : தமிழ்

குறிப்புரை : சத்திவிடங்கநாகிய ஸ்ரீகாடபட்டிகள் பெற்கடையார் மகள் சாமவை என்கிற காடவன் பெருந்தேவி திருவேங்கடப் பெருமாளுக்கு வழிபாடு செய்து வெள்ளியால் எழுந்தருளுவித்த மணவாளப் பெருமானடிகளுக்கு மார்கழி மாதம் ஏழு நாட்கள் ஏகாதசி வைபவத்தை கொண்டாடுவதற்காக திருச்சுகனூர் அவையாருக்கும், கோயிலுக்கும் பொன் அளித்து 4176 குழி நிலம் வாங்கி வழங்கியுள்ளார். இவை பல்வேறு துண்டு நிலங்களாகும். இதற்கான வரிவிலக்கிற்கும் வகை செய்துள்ளார். இதனைக் கைக்கொண்ட திருவேங்கடத்து அவையாரே எல்லா வைபவங்களையும் கண்காணித்து நடத்துவதாக சாமவைக்கு உறுதி கூறியுள்ளனர்.

ஆதாரம் : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி எண். 1 எண். 9. பக்.16.

# 16

## அச்சுததேவராயர் காலத்து திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்து வட சுவர்

குலம் : விஜய நகரம் அரசன் : அச்சுதராயன்

காலம் : சக வருடம் 1460; மொழி : தமிழ்

கி.பி. 1530 எழுத்து : தமிழ்

குறிப்புரை : லெபாக்ஷியைச் சார்ந்த நந்திலக்கிச் செட்டியாரின் மகன் பெருங்கொண்டை வீரப்பண்ணன் திருவேங்கடமுடையானுக்கு உணவு படையலுக்காக 2000 பொன் கோயிற் கருவூலத்தில் செலுத்தியுள்ளார். கோயிற் தானத்தார் இதனைப் பெற்றுக்கொண்டு இதனை நிறைவேற்ற ஒப்புதலளித்துள்ளனர். கொடையாளி வீரப்பண்ணனுக்கு இறைவனுக்குப் படைத்த உணவில் நாலில் ஒரு பகுதி அளிக்கப்பட வேண்டியது.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள் தொகுதி 4. எண். 119.

# 17

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரம் தென் சுவர்

காலம் : 16ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

குறிப்புரை: நந்திலக்கி என்பாரின் மகனான பெருங்கொண்டை வீரப்பன் வெள்ளிப்பாத்திரங்களை திருவேங்கடமுடையானுக்கு அளித்ததைத் தெரிவிக்கின்றது.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள் தொகுதி 4. எண். 41.

# 18

## நரசிம்மனின் திருமலைக் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் வட சுவர்

குலம் : விஜய நகரம் (சாளுவ) அரசன் : நரசிம்மன்

காலம் : சக வருடம் 1389; மொழி : தமிழ்

கி.பி. 1467 எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலைத்தானத்தார் திருமலையிலுள்ள இராமாநுஜ கூடத்திற்கு தலைவரான கந்தாடை இராமாநுஜ ஐய்யங்காருக்கு செய்து கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிப்பிடுகிறது. இவர் தனது பொருளை முதலாக இட்டு கொற்ற மங்கலம் மற்றும் கூறை என்ற இடங்களில் கால்வாய்கள் வெட்டி இதிலிருந்து பெருகும் விளைச்சலைக் கொண்டு நரசிங்கராஜனுடையார் சந்தி என்ற சிறப்பு பூசனை ஒன்றை இறைவனுக்கு ஆரம்பித்தார். இதில் இறைவனுக்கு திருக்கண்ணாமடையை படைத்து பின்னர் இதனை சத்திரத்திற்கு வருகை தரும் அடியார்களுக்கு விநியோகிக்கப்படவேண்டியது.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள் தொகுதி 2. எண். 26

# 19

## சாளுவ நரசிம்மரின் திருமலைக் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் வட சுவர்

குலம் : விஜய நகரம் அரசன் : நரசிம்மன்

காலம் : சக வருடம் 1386; மொழி : தமிழ்

கி.பி. 1464 எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலைக்கோயில் தானத்தார் திருமலை சன்னதி தெருவிலுள்ள இராமாநுஜ கூடத்தின் நிருவாகி கந்தாடை ராமாநுஜ ஐய்யங்காருக்கு செய்து குடுத்த ஒப்பந்தத்தின் பேரில், இறைவன் அழகப்பிரானாருக்கு நறுமணமிக்க பொருள்களைக்கொண்டு வழிபாடு புரிய உறுதியளித்துள்ளனர்.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள் தொகுதி 2. எண். 22.

# 20

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் வட சுவர்

குலம் : விஜய நகரம் அரசன் : சாளுவ நரசிம்மன்

காலம் : சக வருடம் 1391; மொழி : தமிழ்

கி.பி. 1469 எழுத்து : தமிழ்

குறிப்புரை : இக்கல்வெட்டானது திருமலைதானத்தார் இராமாநுஜ கூடத்திற்கு பொறுப்பாளியான கந்தாடை இராமாநுஜ ஐய்யங்காருக்கு செய்து கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிக்கிறது. இவர் தினமும் அர்த்தசாமத்தில் இறைவன் அமுது செய்தருளும் போது இரண்டு இராஜான திருப்போனகம் படைக்க தம்முடைய பொருள் இட்டு கோயிலுக்கு உரிமையான திருவேங்கடநல்லூரில் கால்வாய் வெட்டி பாணகம் என்ற ஊரில் பயிர் செய்து விளைந்த விளைச்சலை கோவிந்தப்பெருமாள் அமுதுசெய்தபிறகு இராஜான திருப்போனகம் படைத்து பின்னர் அதனை இராமாநுஜ கூடத்தில் செலவழித்துக்கொண்டு, பின்னர் முன்பு தான் 700 பணம் கொடுத்து நூறு குழி நிலத்தை வாங்கி அதன் விளைச்சலையும் கோவிலுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள்

தொகுதி 2. எண். 40.

# 21

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் வட சுவர்

காலம் : சக வருடம் 1368; மொழி : தமிழ்
கி.பி. 1446 எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலையிலுள்ள பங்கயச் செல்வி திருநந்தவனத்துக்குப் பொறுப்பாளரான அதிகாரி எம்பெருமானார் சீயருக்கு கோயில் தானத்தார் செய்துக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைப் பற்றிக் கூறுகின்றது. இறைவன் திருவேங்கடமுடையானும், கோவிந்தப்பெருமாளும் ஆடி, சித்திரைத் திங்களிலும் நடைபெறும் கொடித் திருநாள்கள் ஒன்பதிலும் திருவோலக்கத்தில் எழுந்தருளுங்கால் தம் பேராலே நடைபெற வேண்டிய நிவந்தங்களை விவரிக்கின்றது. இறைவனுக்குப் படைக்கப்பட வேண்டிய உணவு வகைகளான திருக்கண்ணாமடை, அப்பமுது முதலியவற்றுக்குத்தேவையான பொருட்களைப் பட்டியலிடுகின்றது. இவை ஜீயரளித்த ஆயிரம் பணத்தை முதலாக வைத்துக்கொண்டு நிறைவேற்றப்பட வேண்டியது. இறைவனுக்கு அளிக்கப்பட்ட உணவு வகைகளை பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய விவரத்தையும் கூறுகின்றது.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள்
தொகுதி 1. எண். 221.

# 22

## சாளுவ நரசிம்மரின் திருமலைக் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் மேற்குச் சுவர்

குலம் : விஜய நகரம் அரசன் : சாளுவ நரசிம்மர்

காலம் : சக வருடம் 1393; மொழி : தமிழ்

கி.பி. 1471 எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலைதானத்தார் சிங்கர் கோயில் தெருவில் வசிக்கும் புல்லகண்டம் திருவேங்கட தாசருக்கு செய்துக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிப்பிடுகின்றது. நரசிங்கராயரின் ஆணையின்படி திருவேங்கடமுடையானுக்கு நரசிங்கராஜ சந்தியின் போது படைக்கப்படும் அப்பம், அக்காளி படையல்களை நரசிங்கராயருக்கு அளித்த பிறகு மீதமுள்ளதை திருவேங்கடதாசருக்கு அளிக்கப்பட வேண்டும்.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள்

தொகுதி 2. எண். 48.

# 23

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் மேற்குச் சுவர்

காலம் : சக வருடம் 1367; மொழி : தமிழ்
கி.பி. 1445 எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலை தானத்தார் அனந்தசயநருக்கு செய்துக்கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிக்கின்றது. திருவேங்கடமுடையானுக்கு திருக்கொடித்திருநாள் ஏழுக்கும் கோவிந்தப்பெருமாள் திருக்கொடித்திருநாள் இரண்டுக்கும் ஆக ஒன்பது நாட்களில் உணவுவகைகளான சுகியன், திருக்கணாமடை படைப்பதற்காக இவர் கோயிற் பண்டாரத்தில் 300 பணம் செலுத்தியுள்ளார். இதற்குச் செலவாக மேற்கண்ட உணவு வகைகளைப் படைப்பதற்குத் தேவையான பொருள்களைப் பெற்று அமுது படைத்து இறைவனுக்கு அளித்து பின்னர் அதனை கொடையாளிப் பெற்றுக் கொள்ள வேண்டியது என்கிறது இக்கல்வெட்டு.

ஆதாரம் : திருமலைக் கல்வெட்டுக்கள்
தொகுதி 1. எண். 213.

# 24

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

**இடம்** : முதற் பிராகாரத்தின் மேற்குச் சுவர்.

**காலம்** : சக 1380; கி.பி. 1538.

**மொழி** : தமிழ் எழுத்து : தமிழ்

**குறிப்புரை** : இக்கல்வெட்டானது திருமலைக் கோயில் தானத்தார் திருவேங்கடநாதன் திருநந்தவனத்தை மேற்பார்வையிடும் பெருமாள் சீயர்க்கு எழுதிக் கொடுத்த ஒரு ஒப்பந்தத்தைக் கூறுகின்றது. இவர் தன் பெயரால், தினமும் புக்கராயன் சந்தி வழிபாடு நடக்குங்கால், இறைவனுக்குத் திருப்போனகம் உணவு படைக்க கோயிற்பண்டாரத்தில் இரண்டாயிரம் நற்பணம் செலுத்தியுள்ளார். இதனால் வளரும் வட்டியிலிருந்து நெய், உப்பு, மிளகு முதலிய பொருட்களைப் பெற்று இறைவனுக்கு உணவு படைக்கவேண்டும். பின்னர் இதில் இருநாழி கொடையாளிக்கு அளிக்க வேண்டும் என்றும் இவர் காலத்திற்கு பின்பு இந்நந்தவனத்தை நடத்துகின்ற ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவர் பெற வேண்டும் என்றும் கூறுகிறது.

**ஆதாரம்** : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி. 2 எண். 7, பக்கம் 10–11.

# 24-A

## கிருஷ்ணதேவராயரின் திருமலை கன்னடக் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் தென் சுவர்

காலம் : சக வருடம் 1435; மொழி : கன்னடம்

கி.பி. 1513 எழுத்து : கன்னடம்

குறிப்புரை : இக்கல்வெட்டானது மன்னர் கிருஷ்ணதேவராயர் திருப்பதிக்குச் சென்று இறைவன் திருவேங்கடநாதனுக்கு விலையுயர்ந்த மாணிக்கக் கற்களும் முத்துக்களும் பதித்த ஆபரணங்களை ஈந்தார். இவ்வாபரணங்களின் எடைகளும் குறிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம் : திருமலை திருப்பதிக் கல்வெட்டுக்கள் தொகுதி 3. எண். 62.

# 24-B

## அச்சுதராயரின் திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

| | | | | |
|---|---|---|---|---|
| இடம் | : | முதற்பிராகாரத்தின் தெற்குச் சுவர் | | |
| குலம் | : | விஜய நகரம் | அரசன் | : அச்சுதராயர் |
| காலம் | : | சக வருடம் 1459; | மொழி | : தமிழ் |
| | | கி.பி. 1537 | எழுத்து | : தமிழ் |

குறிப்புரை : திருமலை தானத்தார் துவராபதி வேளார் மலைப்பெருமாளின் மகன் திருமலைநாதபிள்ளைக்கு செய்துக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிப்பிடுகின்றது. இவர் தனது பிறந்த நட்சத்திர தினத்தன்று இறைவன் திருவேங்கடம் உடையானுக்கு பூசனை, நீராட்டல், உணவு படைத்தல் போன்றவற்றினுக்கு 5700 பணம் கொடுத்துள்ளார். இதற்கு வேண்டும் பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்த பணம் கோயிலுக்கு உரிமையான ஏரி, கால்வாய்களில் முதலாக இட்டு இதிலிருந்து விளையும் விளைச்சலிலிருந்து மேற்கண்ட நிகழ்வுகளை நடத்திக்கொள்ள வேண்டும் என்றும், இறைவனுக்கு படைத்த உணவினை கொடையாளிக்கும் மற்றவர்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கூறுகிறது.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள்

தொகுதி 4. எண். 99.

## 25

# திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

**இடம்** : முதற் பிராகாரம், மேற்குச் சுவர்.

**காலம்** : சக வருஷம் 1367; கி.பி. 1445.

**மொழி** : தமிழ் எழுத்து : தமிழ்

**குறிப்புரை** : திருமலையின் மேலுள்ள பங்கயச்செல்வி திருநந்தவனத்தை மேற்பார்வையிடும் கோயிலதிகாரி எம்பெருமாள் ஜீயருக்கு கோயில் தானத்தார் செய்துக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தை விவரிக்கின்றது. இறைவன் திருவேங்கடமுடையான் கொடி ஏற்றும் ஆடித்திருநாள் முதல் சித்திரைத் திருநாள் வரையிலுள்ள ஏழு நாட்களிலும் கோவிந்தப்பெருமாள் எழுந்தருளும் வைகாசி, ஆனித் திருநாட்கள் இரண்டிலும், புஷ்பயாகம் நடக்கும் நாட்களில் கோவிந்தப்பெருமாள் அமுது செய்து திருவோலக்கத்தில் எழுந்தருளும் நாட்களிலும் உணவு வகைகளை படைக்க ஜீயர் ஆயிரம் பணம் ஈந்துள்ளார். இதிலிருந்து வளரும் வட்டியிலிருந்து தேவையான பொருட்களைப் பெற்று படைக்க வேண்டும் என்றும், பின்னர் இதனை ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவர் களுக்கும், கொடையளித்தவர்களுக்கும் பங்குகளாக அளிக்க வேண்டும் என்றும், அகம்படி கைக்கோளற்கும் பதினாழி முன்றுழக்கு அக்காளி பிரசாதம் அளிக்க வேண்டும் என்றும் கூறுகின்றது.

**ஆதாரம்** : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி எண். 1 கல்வெட்டு 220

பக்கம் 229–230.

# 25-A

## நரசிம்மரின் திருமலைக் கல்வெட்டு

| | | | |
|---|---|---|---|
| இடம் | : முதற்பிராகாரத்தின் வட சுவர் | | |
| குலம் | : விஜய நகரம் | அரசன் | : நரசிம்மர் |
| காலம் | : சக வருடம் 1395; | மொழி | : தமிழ் |
| | கி.பி. 1473 | எழுத்து | : தமிழ் |

குறிப்புரை : திருமலை தானத்தார் புரடகுண்டையில் உறையும் அந்தணர் சோமநாத தீக்ஷிதருக்கு செய்துக்கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிக்கிறது. இவர் கோயிலுக்கு உரிமையானதும் அந்தணர்களின் பிழைப்பிற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள 215 குழி நிலத்தை கோயிலிடமிருந்து வாங்கி கோயிலுக்கே கொடையாக அளித்துள்ளார். இந்நிலத்தின் மீதான வரிகளான கார்கோடை, கடமைக்கு ஈடாக தினமும் இறைவனின் உணவு படையலுக்காக ஒரு நிபந்தம் ஏற்படுத்தியுள்ளார். படைத்த உணவினை தனக்கும் மற்றவர்களுக்கும் காலைச் சந்தி வழிபாட்டின் போது பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள் தொகுதி 2. எண். 54.

# 26

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற் பிராகாரத்தின் மேற்குச் சுவர்.

காலம் : சக வருஷம் 1314; கி.பி. 1392.

மொழி : தமிழ் எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலைக்கோயில் தானத்தார் திருமலையிலுள்ள அரிசாணா லையன் திருநந்தவனத்தின் மேலாளரான முல்லை திருவேங்கட சீயருக்கு செய்துக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் கூறுகின்றது. இவர், அரிசாணாலையன் பூமண்டபத்தில் விழா நாட்களில் இறைவன் மலைக்கினிய பெருமாளும், இறைவியும் திருவோலக்கத்தில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கையில் அவர்களுக்கு உணவு வகைகளான திருக்கண்ணாமடையும், சர்க்கரை அமுதும் வழங்குவதற்காக பண்டாரத்தில் அறுநூறு பணம் செலுத்தியுள்ளார். இதன் வட்டியை முதலாகக்கொண்டு திருநாட்கள் தோறும் இறைவன் மற்றும் இறைவிக்கு உணவு படைத்து, படைத்த உணவை தாமே பெற்றுக்கொண்டு பின்னர் தமது காலத்திற்கு பிறகு அரிசாணாலையன் மடத்தில் உறையும் ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவர் களுக்கு அளிக்கப்பட வேண்டியது.

ஆதாரம் : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி எண் . 1 எண். 190.

பக்கம் 178 – 179.

# 27

# சாளுவ நரசிம்மரின் திருமலைக் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் மேற்குச் சுவர்

குலம் : விஜய நகரம் அரசன் : நரசிம்மர்

காலம் : சக வருடம் 1379; மொழி : தமிழ்

கி.பி. 1457 எழுத்து : தமிழ்

குறிப்புரை : சவிரிப்பெருமாளின் மகளும், நரசிம்ம பெருமாள் கோயிலின் நடன மங்கையுமான வேங்கடவல்லி தன்னுடைய பெயரில் இறைவனுக்கு உணவு படையலுக்காக ஆயிரம் பணம் கொடுத்துள்ளார். இதனால் நித்தமும் இறைவனுக்கு திருப்போனகம் அளிக்கப்பட வேண்டும் என்றும், பின்னர் அதனை சந்தி வழிபாட்டின் போது இறைவனடியார்களுக்கு வழங்கப்பட வேண்டியது.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள் தொகுதி 2. எண். 5.

# 28

## சாளுவ நரசிம்மரின் திருமலைக் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் மேற்குச் சுவர்

குலம் : விஜய நகரம் அரசன் : நரசிம்மர்

காலம் : சக வருடம் 1389; மொழி : தமிழ்

கி.பி. 1467 எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலை தானத்தார் சாளுவ குண்டய தேவருக்கு அளித்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிப்பிடுகின்றது. இவர் அகரம் முருக்கம்பட்டு என்ற கிராமத்தை கோயிலுக்குத் திருவிடையாட்டமாக மகரசங்கிராந்தியன்று அளித்துள்ளார். அத்துடன் அங்குள்ள ஏரியின் பராமரிப்புக்காக இரண்டாயிரம் பணம் அளித்துள்ளார். இதிலிருந்து பெறப்படும் வட்டியிலிருந்து இறைவனுக்கு உணவு படைக்க வேண்டும். இதற்குத் தேவையான பொருட்களை இக்கல்வெட்டு கூறுகிறது.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள்

தொகுதி 2. எண். 31.

# 28-A

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

குலம் : விஜய நகரம் அரசன் : சாளுவ நரசிம்மர்

காலம் : சக வருடம் 1396; கி.பி. 1474

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலை தானத்தார் திருமலை நந்தவனத்திற்குப் பொறுப்பாளரான பெருமாள் தாஸருக்குச் செய்துக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் கூறுகிறது. இவர் தம்முடைய பேராலே தினமும் திருவேங்கடமுடையானுக்கு தினமும் திருப்போனக உணவு படைப்பதற்கும், மேலும் திருவேங்கடமுடையான் ஏழு நாட்களிலும், கோவிந்தப்பெருமாள் இரு நாட்களிலும் ஆக ஒன்பது நாட்களிலும் திருக்கொடி ஆழ்வார் எழுந்தருளியிருக்குங்கால் சுகியன் பணியாரம் படைப்பதற்காக இவர் கோயிற் பண்டாரத்தில் ஆயிரத்து ஒரு நூறு பணம் செலுத்தினார். இதனைக் கோயிலுக்கு உரிமையான ஏரி கால்வாய்களில் இட்டு இதனால் விளையும்பயிர் வகைகளை முதலாகக் கொண்டு தேவையான பொருள்களைப் பெற்று பண்டாரத்திலிட்டு அமுது படைக்கவேண்டும். படைத்த அமுதில் நான்கில் ஒரு பகுதியான கொடையாளியின் பங்கை இராமாநுஜ கூடத்தில் கந்தாடை இராமாநுஜ அய்யங்காரின் சிஷ்யர்களுக்கு அளிக்கப்பட வேண்டியது. இதே போன்று சுகியன் பணியாரம் திருநந்தவானத்துக்குப் பொறுப்பாளியான ஏகாங்கி ஸ்ரீ வைஷ்ணவர்கள் பெறவேண்டும்.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள் தொகுதி 2. எண். 69.

# 29-A

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற் பிராகாரத்தின் தென் சுவர்.

காலம் : சக வருடம் 1398; கி.பி. 1476

மொழி : தமிழ்; எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலைக் கோயில் நிருவாகிகள், ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவரும் மலைக்கினிய நின்றான் திருநந்தவனத்துக்கு பொறுப்பாளருமான கொப்பையனுக்குச் செய்துக்கொடுத்த ஓர் ஒப்பந்தத்தை குறிப்பிடுகின்றது. இவர் தினமும் தன் பெயரால் திருவேங்கடமுடையானுக்கு திருப்போனகம் உணவு படைப்பதற்காக கோயிற் பண்டாரத்தில் நூறு நற்பணம் அளித்துள்ளார். இதனைக் கோயிலுக்கு உரிமையான நிலங்களிலுள்ள ஏரி, கால்வாய்களில் முதலாகயிட்டு இதனால் வளரும் வட்டியிலிருந்து தேவையான பொருட்களைப் பெற்று அதனால் படைக்கப்பட வேண்டிய உணவை இறைவனுக்குப் படைத்த பின்னர் அதில் நாலில் ஒரு பங்கு கொடையாளிக்கும், மீதமுள்ளதை திருப்பதியிலுள்ள ஸ்ரீராமாநுஜகூடத்தை நடத்தும் அழகிய மணவாளஜீயரின் மாணாக்கரான கந்தாடை இராமாநுஜ அய்யங்காரின் மாணாக்கர்களின் சந்ததியினருக்கே இராமாநுஜ கூடத்தில் அளிக்க வேண்டும் என்று கூறுகிறது.

ஆதாரம் : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி : 2, எண். 66, பக்கம் 125.

# 30

## சாளுவ நரசிம்மரின் திருமலைக் கல்வெட்டு

| | | | |
|---|---|---|---|
| இடம் | : முதற்பிராகாரத்து மேற்குச் சுவர் | | |
| குலம் | : விஜய நகரம் | அரசன் | : நரசிம்மர் |
| காலம் | : சக வருடம் 1391; கி.பி. 1469 | மொழி | : தமிழ் |
| | | எழுத்து | : தமிழ் |

குறிப்புரை : இக்கல்வெட்டானது திருமலை தானத்தார் லட்ச்சானி அம்மனின் மகனான அதிராஜாவிற்கு அளித்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிப்பிடுகின்றது. இவர் ஆயிரம் பணம் கொடையாக அளித்துள்ளார். இது கோயிலுக்கு உரிமையான கலிதீரமங்கலம் என்ற கிராமத்திலுள்ள ஏரியில் முதலீடு செய்யப்பட்டு இதிலிருந்து பெறப்படும் விளைச்சலைக் கொண்டு இறைவனுக்கு நித்தமும் திருப்போனகம் தன் பெயரில் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இது தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களைப் பெற்று உணவு தயாரித்து இறைவனுக்குப் படைத்து பின்னர் கொடையாளிக்கு நாலில் ஒருபங்கு அளிக்கப்பட்டது. அதனை நல்லார் வேங்கடவாணனுக்கு அளித்தார். மீதமுள்ளதை வழிபாட்டின் போது மற்றவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள் தொகுதி 2. எண். 43

# 31

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் மேற்குச் சுவர்

அரசன் : சாளுவ நரசிம்மர்

காலம் : சக வருடம் 1387; மொழி : தமிழ்

கி.பி. 1465 எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலை தானத்தார் பர்வத இராசாவுக்கு செய்துக்கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் கூறுகிறது. இவர் தினமும் தம்முடைய பெயரால் நாலு திருப்போனகம் இறைவன் திருவேங்கடமுடையானுக்கு படைக்க, கோயிலுக்குரிமையான நிலத்தில் ஒரு வாய்க்கால்வெட்டி நீர்கொண்டு சென்று பயிர் ஏற்றுவித்து இதனால் விளையும் பயிர் வகைகளைக் கொண்டு திருப்போனகம் செய்து இறைவனுக்குப் படைத்து பின்னர் கந்தாடை இராமாநுஜ ஐய்யங்காரின் ஆலோசனைப்படி இருநாழி இவ்வுணவை தண்ணீர் பந்தல் கூலி ஆளுக்கும் செங்கழுநீர் பயிற்செய்யும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியது.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள் தொகுதி 2. எண். 23.

# 33

## திருமலை வடமொழிக் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் தென் சுவர்

காலம் : கி.பி. 12-13ம் நூற்றாண்டு

அரசன் : ஹோபளன் மொழி : வடமொழி

எழுத்து : கிரந்தம்

குறிப்புரை : உயர்ந்த சிந்தையுடையவனும், நற்பண்புகள் நிறைந்தவனுமான ஹோபள அரசன் மிகுந்த பக்தியுடன் இறைவனுக்கு ஓர் வெள்ளிக்கரம் நல்க ஹோபள யாதவனுக்கு ஆணையிட்டான்.

விஷ்ணுவின் திருக்கரத்தை இவ்வாபரணம் அலங்கரித்துள்ளது. வைகுந்தம் என்றால் வேங்கடமலைதான் என்பதாகும்.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள் தொகுதி 2. எண். 116.

# 33-A

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற் பிராகாரத்தின் தென் சுவர்.

காலம் : 12, 13-ஆம் நூற்றாண்டு.

அரசன் : தஞ்சையையாண்ட யாதவன்

மொழி : தமிழ்: எழுத்து : தமிழ்

குறிப்புரை : தஞ்சையம்பதியை ஆண்ட யாதவ மன்னன் ஹோபளநாதன் கல்வி கேள்விகளில் வண்மை பெற்றவர். இவர் நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த வடவேங்கடநாதனுக்கு திருக்கைமலர் ஈந்ததைத் தெரிவிக்கின்றது இக்கல்வெட்டு.

ஆதாரம் : திருமலை கல்வெட்டுக்கள் - தொகுதி ஒன்று, எண். 117, பக். 142.

**34**

# திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் தென் சுவர்.

காலம் : சக வருடம் 1376; கி.பி. 1454.

மொழி : தமிழ்; எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலையிலுள்ள பாபநாசத்தின் கண் அமைந்துள்ள திருநந்தவனத்தை பராமரிக்கும் ஸ்ரீராமதாசருக்கு திருமலைக்கோயில் தானத்தார் செய்துக் கொடுத்த ஒரு ஒப்பந்தத்தைக் கூறுகின்றது. இவர் தன் பெயரில் தினமும் திருவேங்கடமுடையானுக்கு திருப்போனகம் அளிக்க ஆயிரம் பணம் கோயிற் பண்டாரத்தில் செலுத்தியுள்ளார். இதனை பொக்கராயன் சந்தி முடிந்தவுடனே இப்போனகம் மலைக்கினிய நின்றான் காலால் (அளவு) செலுத்த வேண்டியது. படைத்த உணவை கொடையளித்தவருக்கும், திருநந்தவனம் பயிர் செய்யும் வைணவர்களும் பெற வேண்டியது. கோயிற் கணக்கு திருநின்ற ஊருடையான் இதற்கு கையொப்பமிட்டுள்ளார்.

ஆதாரம் : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி 1,
எண். 225 பக்கம் 244.

# 35

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற் பிராகாரத்தின் தெற்குச் சுவர்.

காலம் : சக வருடம் 1384; கி.பி. 1462.

அரசன் : நரசிங்க ராயர்

மொழி : தமிழ்; எழுத்து : தமிழ்

குறிப்புரை : சந்திரகிரி ராஜ்யத்திலுள்ள சாத்தக்குடிக்குத் தலைவரான மாணிக்க நாயினாரின் மகனான கோனேரியும் உலகளந்த வேளானும் கோயிலுக்குச் செய்துக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

நாராயணப்புறப்பற்றின் கண் அமைந்துள்ள சாத்தக்குடி மருதூரில் வசிக்கும் பெரிய கோபாலன், சின்னன், காரி, சிறுக்கோபாலன் நால்வரையும் (மேற்கண்ட இருவர்) திருவிளக்குக்குடிகளாக விட்டனர். விட்ட நால்வரும் ஆண்டு தோறும் கோயிலுக்கு இரண்டு மரக்கால் நெய்யை அளந்து அதற்காக சீயர் கையெழுத்து ஓலையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகின்றது.

ஆதாரம் : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி : 2 எண். 12. பக். 16–17.

# 36

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

**இடம்** : முதற் பிராகாரத்தின் தென் சுவர்.

**காலம்** : சக வருடம் 1312; கி.பி. 1390.

**மொழி** : தமிழ்; எழுத்து : தமிழ்

**குறிப்புரை** : திருமலைக்கோயில் தானத்தார் திருமலையிலுள்ள அரிசரணாலையன் தோட்டத்தை நிர்வகிக்கும் முல்லைத் திருவேங்கடஜீயருக்குச் செய்துக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிப்பிடுகின்றது. திருமலையில் உள்ள இறைவனும், இறைவியும் மார்கழி மாதத்தில் திருப்பாவையிலுள்ள நடுப்பத்து பாட்டுகளைக் கேட்க திருவோலக்கத்தில் எழுந்தருளுங்கால் அவர்களின் உணவு படையலுக்கான தேவையான பொருட்களைப் பெறுவதற்கும் ஸ்ரீகோவிந்தப்பெருமாள் திருப்பாவை பத்து நாட்கள் கேட்டருளவும், தேவையான பொருட்களை பெறுவதற்கும், சாத்துமுறை நாளன்று படைப்பதற்கு அப்பத்திற்குமாக வேங்கடசீயர் ஆயிரத்து இருநூற்று பணம் அளித்துள்ளார். இறைவனுக்குப் படைத்த படையலில் தனக்கும் அரிசரணாலையன் மடத்திற்கும், தாநத்தார்க்கும் அளித்து பின்னர் திருச்சுகனூர் சபையாருக்கும், கோயில் நிர்வாகிக்கும், கோயில் கணக்குக்கும், பூசகருக்கும் அளிக்கப்படவேண்டும் என்றும், தான் இறந்த பிறகு இம்மடத்தை நிர்வகிக்கும் ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவர் பெற வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**ஆதாரம்** : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி 1 எண். 187, பக். 173–175.

# 37

## அச்சுதராயரின் திருமலைக் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் தென் சுவர்

குலம் : விஜய நகரம் அரசன் : அச்சுதராயர்

காலம் : சக வருடம் 1455; மொழி : தமிழ்

கி.பி. 1533 எழுத்து : தமிழ்

குறிப்புரை : நாகபட்டரின் மகனும், இராயஸ அதிகாரியுமான இராமச்சந்திர தீட்சிதர் தன்னுடைய பிறந்த நட்சத்திரமான ரோஹிணியன்று திருவேங்கடமுடையானுக்கு உணவு படைக்க 5000 பணம் ஈந்துள்ளார். இப்படையலானது அச்சுதராயகோனேரிக் கரை என்ற இடத்திலுள்ள மண்டபத்தில் இறைவன் ஏறி அருளுங்கால் படைக்கப்பட வேண்டும். இக்கொடையைப் பெற்றுக்கொண்ட கோயில் தானத்தார் இதனை கோயிலுக்கு உரிமையான நிலங்களிலுள்ள ஏரி குளங்களில் முதலீடு செய்தனர். இதனால் பெறப்படும் விளைச்சலிலிருந்து இவ்வுணவுக்குத் தேவையானப் பொருட்களைப் பெற்று பின்னர் படைத்த உணவினை பலருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறது இக்கல்வெட்டு.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள்

தொகுதி 4. எண். 24.

# 38

# கிருஷ்ணதேவராயரின் திருமலை கன்னட கல்வெட்டு

**இடம்** : முதற்பிராகாரத்தின் தென் சுவர்

**குலம்** : விஜய நகரம் அரசன் : கிருஷ்ணதேவராயர்

**காலம்** : சக வருடம் 1434; மொழி : கன்னடம்

கி.பி. 1512 எழுத்து: கன்னடம்

**குறிப்புரை** : கிருஷ்ண தேவராயரின் வாயிற் காவலாளியான நரசய்யனும் அவரது சகோதரர்களான திம்மய்யன் மற்றும் நரசய்யனும் எப்போதும் திருவேங்கடநாதனை வழிபடுபவர்கள். இவர்களின் தாயார் பசவம்மாவும் இவ்விறைவனை வழிபடுகிறார்.

**ஆதாரம்** : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள் தொகுதி 3. எண். 26.

## 39

# திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

**இடம்** : முதற் பிராகாரத்தின் தென் சுவர்.

**காலம்** : சக வருடம் 1301; கி.பி. 1379

**மொழி** : தமிழ்; எழுத்து : தமிழ்

**குறிப்புரை** : திருமலையில் விழா நடக்கும் திருநாட்களில் இரண்டாம் நாளில் இறைவன் மலைக்கினிய பெருமாளுக்கு அவரது நாச்சிமாரும் அங்குள்ள அழகப்பிரானார் திருப்பூமண்டபத்தில் வந்துத் தங்குங்கால் அவர்களுக்கு உணவு படைக்கத் தேவையான பொருள்களுக்காகவும், அவர்களின் நீராட்டலுக்கு வேண்டும் பொருட்களுக்காகவும் திருப்பதி ஸ்ரீவைணவரான திருக்கலிகன்றிதாஸர் கோயில் கருவூலத்தில் நானூற்று ஐம்பது பணம் செலுத்தியுள்ளதைக் கூறுகின்றது இக்கல்வெட்டு. கோயில் கணக்கு திருநின்றஊர் உடையான் இதற்கு கையொப்பமிட்டுள்ளார்.

**ஆதாரம்** : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி : ஒன்று எண். 184. பக்.170–171.

# 40

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற் பிராகாரத்தின் தென் சுவர்.

காலம் : சக வருடம் 1366; கி.பி. 1444

மொழி : தமிழ்; எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலைத்தானத்தார் சந்திரகிரியிலுள்ள தேவரசர் மகனான மல்லண்டையர்க்குச் செய்துக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைப் பற்றிக் கூறுகின்றது. இவர் தன் பெயரில் தினமும் இரு சந்தி வேளையில் திருவேங்கடமுடையானுக்கு உணவு அளிக்க கோயிலுக்கு உரிமையான பாடி என்ற கிராமத்திலுள்ள நிலத்திற்கு நீர் பாய ஒரு ஆறு வெட்டுவித்துள்ளார். இதனால் விளைந்த விளைச்சலில் உணவுக்கு (திருப்போனகம்) தேவையான பொருட்களைப் பெற்று உணவு படைக்க வேண்டும் என்றும், படைத்த உணவு வகைகளை மல்லண்டையருக்கும் மற்ற அடியார்களுக்கும் வழிபாட்டு வேளையில் வழங்க வேண்டும் என்று கூறுகின்றது. கோயில் கணக்கு திருநின்ற ஊருடையான் இவ்வேற்பாட்டிற்கு ஒப்புதலளித்துள்ளார்.

ஆதாரம் : திருமலைக் கல்வெட்டுக்கள்-தொகுதி : ஒன்று, எண். 197.பக். 187-188.

# 40-A

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற்பிராகாரத்தின் தென் சுவர்

குலம் : விஜய நகரம் அரசன் : சாளுவ நரசிம்மர்

காலம் : சக வருடம் 1398 மொழி : தமிழ்

கி.பி. 1476 எழுத்து : தமிழ்

குறிப்புரை : இக்கல்வெட்டானது திருமலை தானத்தார் திருமலைக்கோயிலுக்குச் சொந்தமான மலைக்கினிய நின்றான் திருநந்தவனத்தின் மேலாளரான கோப்பய்யனுக்குச் செய்துக் கொடுத்த உறுதிப்பாட்டை கூறுகிறது. இவர் நித்தமும் தன் பேரால் இறைவனுக்கு திருப்போனகம் வழங்கியருள கோயிற் பண்டாரத்தில் ஆயிரம் நற்பணம் செலுத்தியுள்ளார். இதனைக் கோயிலுக்குச் சொந்தமான நிலத்திலுள்ள ஏரி வாய்க்கால்களிட்டு இதனால் விளையும் பொருள்களை பண்டாரத்தில் இட்டு உணவாக்கி இறைவனுக்குப் படைத்த பின்னர், அதில் கொடையாளி பெறும் நான்கில் ஒருபகுதி திருமலை திருப்பதியிலுள்ள இராமாநுஜ கூடத்திற்கும் பொறுப்பாளியான கந்தாடை இராமாநுஜ அய்யங்காரின் சிஷ்யர்கள் பெற வேண்டியது என்றும் குறிப்பிடுகின்றது.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள்

தொகுதி 2. எண். 66.

# 41

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற் பிராகாரத்தின் தென் சுவர்.

காலம் : சக வருடம் 1389; கி.பி. 1467

அரசன் : நரசிங்கதேவ மஹாராயர்

மொழி : தமிழ்; எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலை தானத்தார் அரசர் சாளுவ குண்டைய தேவ மகாராஜ உடையாரின் மகனான நரசிங்க தேவமகாராசாவிற்கு செய்துக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைப் பற்றி விவரிக்கின்றது. இவர் தமது கொடையாக கோயிலுக்கு வஞ்சிபாக்கம், மல்லிமாலை, செறுலக்கூர், பீமபுரம், வாளால்மண் கொண்டான் என்ற ஐந்து கிராமங்களும் அளித்துள்ளார். திருவேங்கடமுடையானுக்கு முப்பது சந்தியிலும் அப்பம், திருக்கண்ணாமடை, சுகியன் போன்ற உணவு வகைகளைப் படைக்க நெய், சர்க்கரை, பயறு, மிளகு, தேங்காய், தயிர், காய்வகைகளை கொடையாக அளிக்கப்பட்ட ஐந்து கிராமங்களிலிருந்து வரும் முதலை வைத்து இப்பொருட்களைப் பெற்றுக்கொண்டு உணவு வகைகளைத் தயாரித்து படைக்க வேண்டும். இவ்வாறு இறைவனுக்கு அளிக்கப்பட்ட உணவு வகைகளை யாருக்கெல்லாம் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்ற விதிமுறைகளை இயம்புகின்றது. கறிகாயை சமைத்திடும் அந்தணருக்கு மாதம் ஒன்றுக்கு பன்னிரண்டு பணம் அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறது.

ஆதாரம் : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி : 2 எண். 34. பக். 57–58.

# 42

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற் பிராகாரத்தின் தென் சுவர்.

காலம் : சக வருடம் 1390; கி.பி. 1468

மொழி : தமிழ் எழுத்து : தமிழ்

குறிப்புரை : திருமலை தானத்தார் கோயில் கணக்குப் பிள்ளையான ஆதியூருடையார் சதாசிவநயினார் கோவிந்தற்குச் செய்துக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் கூறுகின்றது. இவர் தினமும் இறைவன் திருவேங்கடமுடையானுக்குத் திருப்போனகம் உணவு படைப்பதற்கு கோயில் பண்டாரத்தில் ஆயிரம் பணம் செலுத்தியுள்ளார். இதிலிருந்து வளரும் வட்டியிலிருந்து உணவுப் பொருட்களான நெய், பயறு, தயிர், உப்பு, மிளகு பெற்று உணவாக்கி இறைவனுக்கு படைக்க வேண்டும். பின்னர் இவ்வுணவு நாலில் ஒரு பங்கை நல்லா வேங்கடவாணன் பெறுவதற்காகவும் மீதமுள்ளதை வழக்கம் போல் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறது.

ஆதாரம் : திருமலைக் கல்வெட்டுக்கள்– தொகுதி : 2 எண். 37. பக். 63–64.

# 43

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

இடம் : முதற் பிராகாரத்தின் தெற்குச் சுவர்.

காலம் : சகாப்தம் 1385; கி.பி. 1463

அரசன் : சாளுவ குண்டுராச உடையார்

மொழி : தமிழ்; எழுத்து : தமிழ்

குறிப்புரை : (அரசர்) சாளுவ குண்டுராஜாவின் மகனை திம்மராச உடையாற்கு திருமலை தானத்தார் செய்துக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைப் பற்றிக் கூறுகிறது. இவர் நரசிங்க ராஜ உடையாரின் தன்மமாக இறைவன் திருவேங்கடமுடையானுக்கு தினமும் நான்குமுறை திருப்போனகம் உணவு படைப்பதற்கு சிருபாடி என்ற கிராமத்தில் ஒரு கால்வாய் வெட்டிவித்து அந்தக் கோயிலுக்கு உரிமையான அவிலாலியில் உள்ள நிலத்திற்கு நீர் பாயவிட்டு அதனால் வளரும் பயிரை கோயிற் பண்டாரத்தில் முதலாகச் செலுத்தி அதனை இறைவன் திருவேங்கடமுடையானுக்கு திருப்போனகம் அமுது படைப்பது என்றும், அவ்வாறு படைத்த உணவை கொடையாளின் அறமாக கோயில் திருநந்தவனம் பயிர் செய்துள்ள அடியாரும், தானத்தாரும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஒப்பந்தத்தைக் கூறுகின்றது.

ஆதாரம் : திருமலைக் கல்வெட்டுக்கள் – தொகுதி : 2. எண். 17. பக்.22–23.

# 44

## திருமலைத் தமிழ்க் கல்வெட்டு

| | | | |
|---|---|---|---|
| இடம் | : முதற்பிராகரத்தின் தென் சுவர் | | |
| குலம் | : விஜய நகரம் | அரசன் | : சாளுவ நரசிம்மர் |
| காலம் | : சக வருடம் 1390 | மொழி | : தமிழ் |
| | கி.பி. 1468 | எழுத்து | : தமிழ் |

குறிப்புரை : திருமலைத் தானத்தார் அழகிய மணவாள சீயர் மாணாக்கரான கந்தாடை ராமாநுஜ அய்யங்காருக்கு செய்துக் கொடுத்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிக்கின்றது. இவர்கோயிலுக்கு உரிமையான திருவேங்கட நல்லூரில் ஓர் ஏரியை வெட்டிவித்தார். இதிலிருந்து விளையும் பொருட்களை தினமும் மாலையில் இறைவனுக்கு தயிர் சாதம், பொறித்த கறி, எலுமிச்சை சோறு வெற்றிலை போன்ற உணவு வகைகள் தயாரித்து பின்னர் அதனை ஆடியிலிருந்து சித்திரைத்திங்கள் ஏழுநாட்களில் இறைவனுக்கு படைக்கப்பட வேண்டும். சாத்தாத ஸ்ரீவைஷ்ணவர்கள் இதிலிருந்து ஆறு அப்பம் பெற வேண்டியது. மேலும் தயிர்சாதம் தயாரிக்க நாற்பது பசுக்கள் அளிக்கப்பட்டுள்ளது. இறைவன் குளியலுக்கு சந்தனமும் நல்க வேண்டும் என்கிறது இக்கல்வெட்டு.

ஆதாரம் : திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள்
தொகுதி 2. எண். 38.





















































































